செ.வெ.எண்.19 நாள்.06.09.2017.

**திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கண்தான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து பங்கேற்றார்.**

--------

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண் வங்கி சார்பில் கண்தான இருவார விழா மற்றும் விழிப்புணர்வு பேரணி இன்று (06.09.2017) நடைபெற்றது.

கண்தான விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இப்பேரணியில் பயிற்சி மருத்துவர்கள், மாணவ, மாணவியர்கள், செவிலியர்கள் மற்றும் பயிற்சி செவிலியர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கண்தான இருவார விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண் வங்கிக்கு கண்தானம் செய்து 26 நபர்களின் வாரிசுதாரர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி, நற்சான்றிதழ்களை வழங்கினார். கண்தான விழிப்புணர்வு தொடர்பாக நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது:-

கண்தானம் செய்தவர்களின் குடும்பத்தினர்களை பாராட்டுவது சிறந்த செயல் ஆகும். கண்தானம் தேவைப்படுபவர்கள் பொருத்தவரை தற்பொழுது இந்தியாவில் 30 சதவிகிதம் மட்டுமே நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே கண்தானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது அவசியமாகிறது. குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு உதவும் வகையில் அமைய வேண்டும். முக்கியமாக, கண்தானம் செய்ய முன்வருபவர்களுக்கு உறுதுணையாக அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் செயல்பட்டால் மட்டுமே அவர்களின் விருப்பத்தினை முழுமையாக நிறைவேற்ற முடியும். கண்தானம் செய்தவர்களின் குடும்பத்தினரை பாராட்டுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என தெரிவித்தார்.

கண்தான விழிப்புணர்வு பேரணி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் துவங்கி, பெரியார் நகர் வரை சென்று மகளிர் மற்றும் மகப்பேறு சிகிச்சை பிரிவு வழியாக மருத்துவமனையினை வந்தடைந்தது.

இந்நிகழ்ச்சியில், மருத்துவக் கண்காணிப்பாளர் மரு.இரவிச்சந்திரன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் மரு.ரேவதி, உறைவிட மருத்துவ அலுவலர் மரு.நீல தாட்சாயின் மற்றும் கண் மருத்துவ துறைத்தலைவர் மரு.வி.இராமலட்சுமி, கண் வங்கி மருத்துவர் மரு.எஸ்.பி. சிவதாணு, மருத்துவ அலுவலர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள், மாணவ, மாணவியர்கள், செவிலியர்கள் மற்றும் பயிற்சி செவிலியர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியிடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.